# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2270/14 - 2022 මාර්තු මස 08 වැනි අඟහරුවාදා - 2022.03.08

*2270/14 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

**அறிவித்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020 ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2022 மாச்சு மாதம் 04 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2022, மாச்சு 08.*

*(1) அவ் அறிவித்தலில் இல. "1.1 அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பும் அதன் கீழுள்ள "01. கடமைகளும் பணிகளும் 02. அதிவிசேட முன்னுரிமைகள் 03.உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" பின்வருமாறு:*

**1.1 பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் "பாதுகாப்பான நாட்டை" உருவாக்குவதற்குரிய சட்டம் மற்றும் சட்ட விதிகளுக்கமைய பாதுகாப்பு விடயத்திற்கான கொள்கைகளை




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வகுத்தலுக்காக உதவி வழங்குதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் உள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. முப்படைச் சேவைகளில் ஈடுபட்டுள்ள, ஓய்வுபெற்ற, காலஞ்சென்ற மற்றும் அங்கவீனமுற்றோரின் குடும்பங்கள் தொடர்பான நிருவாக, வழங்கல் மற்றும் நலன்புரி செயற்பாடுகளை புரிதல்.

2. குடிவரவு மற்றும் குடியகல்வு நிருவாகப் பணிகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் வினைத்திறனான சேவையொன்றாக நடாத்திச் செல்லுதல்.

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்ட விதிகளும்* |
|---|---|
| 1. பதிவாளர் நாயகத் திணைக்களம்<br>2. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்<br>3. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டெட்<br>4. இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்தும் அதிகார சபை<br>5. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை<br>6. பாதுகாப்பு சேவைகள் பாடசாலை<br>7. தேசிய பாதுகாப்பு நிதியம்<br>8. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்<br>9. இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்<br>10. இலங்கை தேசிய பாதுகாப்புக் கல்லூரி<br>11. ரணவிரு சேவை அதிகாரசபை<br>12. அபி வெனுவென் அப்பி நிதியம் | • பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)<br>• மலைநாட்டு விவாகம் மற்றும் மண நீக்கற் சட்டம் (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க)<br>• முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம் (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)<br>• நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க)<br>• ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க)<br>• சாதாரண விவாகப் பதிவு கட்டளைச் சட்டம் (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)<br>• நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் (1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க)<br>• காணிகள் (உடமை வழங்குதல் வரையறைச்) சட்டம் (2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க)<br>• முத்திரைச் சட்டம் (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)<br>• தண்டப் பணம் அதிகரிக்கும் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)<br>• இரத்துச் செய்ய முடியாத நன்கொடை உரித்துப் பத்திரங்களை நன்றியின்மை காரணமாக இரத்துச் செய்தல் சட்டம் (2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க)<br>• இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br>• அற்றோணி தத்துவப் பத்திரம் பதிவு செய்தலுக்கான கட்டளைச் சட்டம் (122 ஆம் அத்தியாயம்) (1902 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க)<br>• காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) |

| | |
|---|---|
| | • சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம் (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க)<br>• கொன்சல் காவற் தூதுப் பணிகள் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க)<br>• இறப்பு பதிவு செய்தல் தற்காலிகச் சட்டம் (2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க)<br>• இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் (2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)<br>• உரித்துக்கள் பதிவுச்சட்டம் (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க)<br>• குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம் (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க)<br>• குடியுரிமைச் சட்டம் (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க)<br>• இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)<br>• உள்நாட்டவரல்லாதோருக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம் (1986 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க)<br>• உள்நாட்டவரல்லாதோருக்கு பிரசாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம் (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க)<br>• இரசாயன ஆயுதங்கள் சமவாயம் தொடர்பான சட்டம் (2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க)<br>• தனியார் பாதுகாப்பு முகவர் நிலையங்கள் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க)<br>• போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமயவாயங்கள் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க)<br>• போதையூட்டும் பொருட்களில் தங்கி வாழும் ஆட்கள் (சிகிச்சையளித்து வரும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம் (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க)<br>• தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br>• ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க)<br>• அப்பிவெனுவென் அப்பி நிதியச் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க) |

(2) அவ் அறிவித்தலில் இல. "1.2 உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பிற்கு பின்னர் பின்வரும் புதிய தலைப்பையும் அதன் கீழுள்ள"01. கடமைகளும் பணிகளும் 02. அதிவிசேட முன்னுரிமைகள் 03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" என்பவற்றைப்பின்வருமாறு உள்ளடக்குவதன் மூலம்,

**1.3 அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

இராஜாங்க அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் "பாதுகாப்பான நாடு" உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் சட்ட விதிகளுக்கமைய அனர்த்த முகாமைத்துவ விடயத்திற்கான கொள்கைகளை வகுத்தலுக்காக உதவி செய்தல், தேசிய வரவு செலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழேயுள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

*02. அதிவிசேட முன்னுரிமைகள்*

1. இயற்கை அனர்த்த ஆபத்துக்களை முன்கூட்டியே இனங்காணுதல், அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ளுதல், பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மீளெழுப்புதலை துரிதப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் மற்றும் நிவாரணச் சேவை நிலையங்களை ஒருங்கிணைத்து நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தல்.

2. அனர்த்த நிலைமைகள் தொடர்பாக சரியான முறையில் எதிர்வு கூறக் கூடிய விதத்தில் நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவால் காலநிலை திணைக்களத்தை வலுப்படுத்தல்.

3. அனர்த்தங்களுக்குள்ளான பிரதேசங்கள், தொடர்ச்சியாக அனர்த்தங்களுக்குள்ளாகும் ஆபத்துள்ள பிரதேசங்கள், அனர்த்தங்களுக்குள்ளான நபர்கள், சொத்துக்கள், தொழில்கள் மற்றும் விவசாய காணிகள் போன்ற சகல விவரங்களையும் உள்ளடக்கிய " தேசிய அனர்த்த தரவுக் களஞ்சியமொன்றை" தாபித்தல்

*03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்*

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்ட விதிகளும் |
|---|---|
| 1. அனர்த்த முகாமைத்துவ தேசிய மன்றம்<br>2. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்<br>3. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்<br>4. வளிமண்டலவியல் திணைக்களம்<br>5. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு | • (2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) |

(3) அவ் அறிவித்தலில் இல."14.1 வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்' எனும் தலைப்பு மற்றும் அதன் கீழுள்ள " 01. கடமைகளும் பணிகளும் 02. அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 03 உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்' என்பவற்றை நீக்குவதன்மூலம்;

(4) அவ் அறிவித்தலில் இல. "14.0 வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர்' எனும் தலைப்பும் அதன் கீழுள்ள "02. கடமைகளும் பணிகளும் 03. அதிவிசேட முன்னுரிமைகள் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" பின்வருமாறு;

**14.0 வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்**

**02. கடமைகளும் பணிகளும்**

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக மற்றும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் ஏனைய தேசிய கொள்கைகளை முன்னிறுத்தி "வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு" ஏற்படுத்துவதற்காக குறித்த சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கமைய வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு விடயத்திற்கு உரிய கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழுள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. வனசீவராசிகளின் பாதுகாப்புக்குத் தேவையான வனப்பூங்காக்கள், நீர்தேக்கங்கள் மற்றும் வன விலங்குகளின் உணவுப் பயிர்கள் பயிரிடுவதை விரிவாக்குதல்.

2. வனவிலங்குகளின் மூலம் கிராமியப் பிரதேசங்களின் வீடுகள், சொத்துக்கள் மற்றும் பயிர்ச்செய்கைகளுக்கான பாதிப்புக்களைக் குறைப்பதற்காக நவீன வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

3. யானைகள்– மனிதர்கள் இடையிலான மோதல்களை தவிர்க்குமுகமாக அவ் ஆபத்தான பிரதேசங்களில் யானை வேலி, அகழிகள் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு இணையாக சமூக மட்டத்திலான பாதுகாப்பு திறமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

4. காடு வளர்த்தலை விரிவாக்குவதன் மூலம் வன அடர்த்தியை உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதற்காக வீட்டுத் தோட்ட மட்டத்தில் போன்று பாடசாலைகள், வைத்தியசாலைகள், அலுவலகங்கள், வேலைத்தளங்கள் மற்றும் பாதைகள் குறைந்த பிரதேசங்களில் போன்று நகர பூங்காக்களில் காடு வளர்ப்பினை அறிமுகப்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல்.

5. பசுமை அடர்த்தியினை விரிவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

6. சதுப்பு நிலங்கள் மற்றும் கண்டல் தொகுதிகளை பாதுகாத்து அவற்றை அழிக்கும் மனித செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்.

7. அரிப்புகள் மற்றும் தரிசு நிலங்களை இனங்கண்டு, தென்னை, வேறு பயிர்கள், புல்வகைகள் மற்றும் விவசாய காடு வளர்ப்புப் பூங்காக்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. கைத்தொழிற்சாலைகளை அண்மித்து காட்டு மரங்களை நடுதல்,நகரங்களை அண்மித்தும் காட்டு மரங்களை நடுதல்,அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் பெருந்தெருக்கள் உள்ளிட்ட பாதையோரங்களில் மரங்களை நடுதல், அரச அலுவலக வளவுகளில் மரங்களை நடுதல், தொடர் மாடி வீடுகளை அண்மித்து மரங்களை நடுதல், மரப்பூங்காக்கள் மற்றும் வீட்டுத் தோட்டத் திட்டங்களுடன் மரநடுகையை ஊக்குவித்தல்.

9. காடுகளை மீள்நடுதலுக்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

10. ஆறுகளை அண்டிய மற்றும் நிலம் சார்ந்த மண் அகழ்வு நிலங்களை நிறுவுதல் மற்றும் ஆற்றங்கரைகளை அபிவிருத்தி செய்தல்.

11. பசுமை மற்றும் செம்மையான நகரங்கள் மற்றும் வதிவிடக் கோட்பாட்டினை ஏற்படுத்துதல் மற்றும் பிரபல்யப்படுத்துதல், சுற்றாடல் தொடர்பான உணர்வுகளைக் கொண்ட மக்களை உருவாக்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

12. யானை மற்றும் மனிதர்களிடையேயான மோதலை தவிர்க்கும் விதத்தில் கிராமங்கள் மற்றும் குடியிருப்புக்களை பாதுகாப்பதற்காக யானை வேலி, அகழிகள் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்களை கிராமிய மக்களின் பங்களிப்போடு நடைமுறைப்படுத்துதல்.

13. வனவிலங்குகளின் பாதுகாப்புக்காக அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களைப் பாதுகாத்தல், அப்பிரதேசங்களில் குளங்கள், ஆறுகள் மற்றும் காடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வனவிலங்குகளின் உணவு விருத்திக்குத் தேவையான மரங்களை நடுதல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. வனப் பாதுகாப்புத் திணைக்களம்<br>2. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்<br>3. தேசிய மிருகக் காட்சிச் சாலைகள் திணைக்களம்<br>4. அரச மரக் கூட்டுத்தாபனம் | • (1907 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) தேசிய மரபுரிமை கானக இடப்பரப்புகள் சட்டம்<br>• (1937 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) தாவர, வனவிலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• தேசிய மிருகக் காட்சிச்சாலைச் சட்டம் (1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) |

EOG 03-0788

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.